# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும்

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | மதுரை | காலம் : | 21/03/2018 | முதல் | 23/03/2018 |
| அறிக்கை எண் : | 023/ 2018 | வெளியீட்டு நாள் : | 20/03/2018 | | |

கடந்த கால வானிலை 16/03/2018 முதல் 19/03/2018 வரை

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 1.1 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 35-38 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24-25 |
| மேக மூட்டம் | 5-6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 42-76 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 7-13 |

எதிர்பார்க்கப்படும் வானிலை ( 25-03-2018 8.30 மணி வரை )

| காரணிகள் | 21-03-2018 | 22-03-2018 | 23-03-2018 | 24-03-2018 | 25-03-2018 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 0 | 0 | 3 | 6 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 36 | 36 | 37 | 37 | 36 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24 | 24 | 25 | 25 | 25 |
| மேக மூட்டம் | 2 | 2 | 4 | 4 | 4 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 65 | 65 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 45 | 45 | 45 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 6 | 6 | 6 |
| காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு |

**குறுஞ்செய்தி**

வரும் 23, 24ம் தேதிகளில் ஆங்காங்கே லேசான மழை பெய்ய வாய்ப்பு. வானம் மிதமான மேக மூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில் காற்று வீசக்கூடும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : தென்னை & கால்நடை**

தற்போது நிலவும் பருவநிலையின் காரணமாக தென்னையில் மாவுப்பூச்சி என்ற கள்ளிப்பூச்சிகளின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. மாவுப்பூச்சிகள் தென்னையில் இளம் திசுக்கள் வளரும் இளம் மட்டைகள், ஓலைகள், பூம்பாலைகள், என அனைத்துப் பகுதிகளையும் தாக்குகின்றன.இளம் குரும்பைகளில் காம்புக்கு அடியில் இம்மாவுப் பூச்சிகள் கூட்டமாக இருந்து கொண்டு சாறை உறிஞ்சுகின்றன. தாக்கப்பட்ட மரத்தின் ஓலை மற்றும் பிற பாகங்களை அகற்றி அழிக்க வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி மாலத்தியான் 50 EC அல்லது 1 மில்லி டைமெத்தோயேட் 30 EC அல்லது 1 மில்லி மெத்தில் டெமட்டான் 25 EC இவைகளில் ஏதேனும் ஒன்றை கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

தற்போது நிலவி வரும் வானிலையின் காரணமாக கால்நடைகளில் அயர்ச்சி ஏற்படும் வாய்ப்புகள் உள்ளதால். கால்நடை வளர்ப்போர் தங்களின் கன்றுகளுக்கு நாள் ஒன்றுக்கு 30 கிராம் தாதுஉப்புக்கலவை கொடுக்கவேண்டும் மேலும் கன்றுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்தல் வேண்டும்.